மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

விரைவுப் பேருந்து வசதி

***50964—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கம்பத்திலிருந்து திருப்பதிக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(ஆ) மற்றும் (ஆ) கம்பம்–திருப்பதி தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களும் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறவிருக்கும் இரு மாநில பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்க இயலும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், தங்கத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். விவசாயிகளின் தோழன் என்றும், குடிமராமத்து நாயகன் என்றும் காவேரிக் காப்பாளன் என்றும் போற்றப்பட்டு, இன்று வெற்றிநடைபோடுகின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கும், அன்பின் அடையாளமாய், பண்பின் உறைவிடமாய், பாண்டிய*

2021 பிப்ரவரி 5]

நாட்டு தங்கம் என்றும், ஜல்லிக்கட்டு நாயகர் என்றும் நாங்கள் போற்றும் அருமை அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், தமிழக அரசு அனைத்து துறைகளிலும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, போக்குவரத்துத் துறை, இந்திய அளவிலே சாதனை படைக்கின்ற பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்தி இன்றையதினம் பல்வேறு பரிசுகளைப் பெற்றிருக்கிறது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு நிலுவைத் தொகையாக சென்ற ஆண்டு 1073 கோடி ரூபாயும், இந்த முறை 972 கோடி ரூபாயும் கொடுத்து ஊழியர்களின் நெஞ்சத்திலே பால் வார்த்து இருக்கிறது. அதுமட்டுமல்ல, தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் சென்ற முறை ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு வழங்கிய ஒப்பற்ற அரசு நம்முடைய தமிழக அரசு, நம்முடைய போக்குவரத்துத் துறை என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கொரோனா காலத்தில்கூட, பேருந்துகள் இயக்கப்படாமல் இருந்த காலத்தில்கூட, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு முழு ஊதியம் வழங்கிய உன்னத துறை போக்குவரத்துத் துறை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகச் சிறப்பாக, நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கம்பத்திலிருந்து திருப்பதிக்கு விரைவுப் பேருந்து இயக்க, இரு மாநில பேச்சுவார்த்தையின்போது ஆவன செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ்